DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

............

<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU</u>

Calendar

Miscellaneous

Preliminary Register                    Case No.C.C. 34 of 2024  PW : 8

Sessions

Prosecution

Deposition of witness for    Defence

Court

Name : திரு. வி. சந்திரமோகன் (உதவி ஆய்வாளர்) விசாரணை அதிகாரி

Father's Name : திரு. விஸ்வநாதன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 54

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.05.2026

**தேதி..19.05.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.8. திரு. வி. சந்திரமோகன், த/பெ. திரு. விஸ்வநாதன் வயது 54 அவர்களை சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

முதல் விசாரணை

1. நான் தற்போது சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் உளவுத்துறையில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 27.12.2023 ஆம் தேதி பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு உதவி ஆய்வாளராக பணியிருந்து போது விவேக், த/பெ. தனஞ்செயலு, M.M. கண்டிகையிருந்து பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு ரசீது எண் 592/2023 ஐ பார்வையிட்டு நிலைய குற்ற எண் 1040/2023 U/Sec. 294(b), 447, 323, 506(1) IPC r/w. 4 of TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் நான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுமதி மற்றும் பிருந்தா ஆகியோர் முன்னிலையில் **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அவைகள் முறையே அ.த.சா.ஆ. 7 மற்றும் 8 ஆகும்.**

3. பின்னர் சாட்சிகள் விவேக், ஜீவரத்தினம், மீனா, சுமதி மற்றும் பிருந்தா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அன்றைய தினம் 12.45 மணிக்கு முனுசாமி நாயுடு கண்டிகை பேருந்து நிறுத்தம் அருகே எதிரியை கைது செய்து 12.50 மணி முதல் 13.15 மணிவரை ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் கண்ணப்ப ரெட்டி மற்றும் அனந்தசெயலு ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 13.30 மணிக்கு காவல்

நிலையத்திற்கு எதிரியை அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் கண்ணப்ப ரெட்டி மற்றும் அனந்தசெயலு ஆகியோரை விசாரணை செய்து தனித்தனி வாக்குமூலம் தயார் செய்தேன். பின்னர் வழக்கு விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் தான். இவ்வழக்கின் புகாரை யார் கொடுத்தார் என்றால் விவேக் என்பவர் 26.11.2023 அன்று கொடுத்தார். CSR எப்பொழுது கொடுக்கப்பட்டது என்றால் மறுநாள் பதிவு செய்யப்பட்டது. அதன் நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை CSR கொடுத்த அன்றே தொடங்கப்பட்டது. CSR பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையானது 27.12.2023 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு என்ன காரணம் என்றால் இவ்வழக்கின் எதிரி அனந்தசயலு சென்னையில் பணிபுரிந்து வந்ததால் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை எனவே காலதாமதம் ஆனது. இவ்வழக்கில் செடிகளை வெட்டியதற்காக புகைப்படம்ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. யார் வெட்டியதாக எனது விசாரணையில் தெரிய வந்தது என்றால் எதிரி வெட்டியதாக தான் தெரியவந்தது. இந்த விவரம் யார் கூறி எனக்கு தெரியவந்தது என்றால் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான மீனா கூறியதின் பேரில் தெரியவந்தது. எதிரி செடிகளை எந்த தேதியில் வெட்டினார் என்றால் 26.11.2023 காலை 10.00 மணிக்கு வெட்டினார். இந்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பார்வை மகஜரை எந்த தேதியில் தயார் செய்தேன் என்றால் 27.12.2023 அன்று காலை 11.00 மணிக்கு பதிவு செய்தேன். 11.30 மணிக்கு முடித்துவிட்டேன். மீனா என்பவரை பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. அவ்வாறு குறிப்பிடாத நிலையில் மீனா என்பவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் மறுவாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. சம்பவயிடம் பொது இடமா என்றால் சம்வயிடம் ஒரு தெரு. எனது

விசாரணையில் பாட்டி ஜீவரத்தினமும் அனந்தசயலுவும் உறவினர்கள் தானா என்று எனக்கு தெரியவந்ததா என்றால் தெரிந்துகொண்டேன் உறவினர்கள் இல்லை. ஜீவரத்தினம் என்பவர் எவ்வளவு காலமாக அங்கு வசித்துவருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. ஜீவரத்தினம் என்பவர் எந்த தெருவில் வசிக்கிறார் என்றால் கிருஷ்ணமூர்த்தி கோவில் தெரு. ஜீவரத்தினம் என்பவர் வீட்டில் யாரெல்லாம் வசிக்கிறார்கள் என்றால் ஜீவரத்தினம் என்பவரின் கணவர் இறந்து விட்டார். யாருடன் வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. ஜீவரத்தினம் என்பவரை எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்றால் 26.11.2023 அன்று விசாரணை செய்தேன். அனந்தசயலு எத்தனை வருடங்களாக அங்கு வசிக்கிறார் என்றால் தெரியாது ஜீவரத்தினம் பாட்டியின் வீட்டிற்கு எதிரே வசிக்கிறார். அவ்வாறு எதிரி வசித்து வந்ததை பற்றி சாட்சிகளிடம் வாக்குமூலம் நான் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்துள்ளேன். எந்நெந்த பிரிவுகளின் கீழ் இவ்வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் 447, 294(b), 323, 506(1) of IPC r/w. Sec. 4 of TNPHW Act. இவ்வழக்கு சம்பந்தமாக வேறு நபர்கள் யாரேனும் புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. ஜீவரத்தினம் என்பவரை கையால் அடித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த கையால் எத்தனை முறை அடித்தார்கள் என்பதை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அத்துமீறி உள்நுழைந்தது பற்றி யார் கூறினார்கள் என்றால் சம்பவத்தை பார்த்த மீனா கூறினார். ஜீவரத்தினம் என்பவரை நான் விசாரித்த போது தகாத வார்த்தைகள் என்னவென்று குறிப்பிட்டு என்னிடம் கூறினாரா என்றால் கூறினார். அதனை வாக்குமூலத்தில் நான் பதிவுசெய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்த மீனா என்பவரை மறுவிசாரணை செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சம்பந்தபட்டவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினார் என்றால் இருக்கலாம் எனக்கு தெரியாது. அதனை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்வத்திற்கு பின் ஒரு மாதம் கழித்தும் எதிரியை நீதிமன்ற காவல் உத்தரவின் பேரில் அடைப்பு செய்த பிறகும் மேற்படி நபர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் தான் என்பதை நான் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தேன். பட்டியல் சாட்சி கண்ணப்பனை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 26.11.2023 அன்று விசாரித்தேன். ஜீவரத்தினம் என்பவருக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில்

CSR அக பதியப்பட்டவை தான் முதல் தகவல் அறிக்கையாக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த CSR எண் 592/2023 என்றால் சரிதான். இந்த வழக்கில் தனஞ்செயலு என்பவர் மீனாவின் கணவர் என்று விசாரணையில் தெரிய வந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு தனஞ்செயலு என்பவர் மீது எதிரி ஆனந்தசயலு நிலம் சம்பந்தமாக புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எதிரிக்கு சம்மன் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. ஜீவரத்தினம் என்பவருக்கு காயம் ஏற்பட்டதா என்றால் மருத்துவமனைக்கு சென்று வந்தார். அதற்கான மருத்துவ ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜீவரத்தினம் வளர்ப்பதாக கூறும் செடி முழுவதுமாக வெட்டப்பட்டுவிட்டதா அல்லது தற்போதும் உள்ளதா என்றால் பாதி வெட்டப்பட்டுள்ளது. எனக்கு தெலுங்கு தெரியுமா என்றால் தெரியாது. ஜீவரத்தினம் என்பவரை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்தேன். எனக்கு தெலுங்கு மொழி தெரியாத நிலையில் தெலுங்கு மொழி தவிர வேறு மொழி தெரியாத ஜீவரத்தினம் என்பவரை எவ்வாறு விசாரணை செய்தேன் என்றால் விவேக் என்பவருக்கு தமிழ் மற்றும் தெலுங்கு தெரியும் அவரின் உதவியுடன் மொழி மாற்றம் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவ்வாறு நான் பதிவு செய்ததற்கான ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.1 ஆவணம் புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் தேதி குறிப்பிடாத நிலையில் எங்களது அலுவலக பதிவேடுகளில் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்று அந்த ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் CIPRUS Application ல் பதியப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அ.த.சா.ஆ.1 ஆவணம் புகாரில் எந்த தேதியில் பெறப்பட்டதாக நான் ஒப்பம் செய்துள்ளேன் என்றால் 26.11.2023. எனது விசாரணையில் ஜீவரத்தினம், மீனா, சுமதி, பிருந்தா, தனஞ்செயலு, கண்ணப்பரெட்டி ஆகியோரிடம் பதிவுசெய்ப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் என்னுடையது அல்ல என்றும் வேறு நபர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல என்னுடையது தான். சம்பவம் வீட்டினுள் நடந்தது. அவ்வாறு நடந்துள்ளபோது Sec. 4 of TNPWH Act எவ்வாறு போட்டுள்ளேன் என்றால் பெண்ணை

மானபங்கம் செய்ததால் நான் போட்டேன். என்ன மானபங்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் கழுத்தை நெறித்து முடியை பிடித்து இழுத்துள்ளதால் போட்டேன். புகாரில் விவேக் குறிப்பிட்டுள்ள அதே வார்த்தைகளை குற்ற இறுதியறிக்கையிலும் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தனஞ்செயலுவிற்கும் மீனாவின் கணவருக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருப்பதால் இந்த புகாரை மிகைபடுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிக்கு வழக்கு சம்பந்தமாக விசாரிக்க வேண்டி அழைப்பாணை அனுப்பியதின் அடிப்படையில் ஆஜரான எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் இல்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக போடப்பப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

**ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு(FAC)**